★ யாழ்மாவட்டத்திற்கு அனுப்பவுள்ள

# 6000 அ. அட்டைகள் கொழும்பில் தடுத்துவைப்பு

யாழ் மாவட்டத்துக்குரிய சுமார் ஆறாயிரம் புதிய தேசிய அடையாள அட்டைகள் கொழும்பில் உள்ள ஆட்பதிவுத்திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இந்த அடையாள அட்டைகள் அடங்கிய நாலு பொதிகளையும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துள்ளது. இவற்றுக்கு விண்ணபித்தவர்கள் அல்லது பெற்றோர் கொழும்பு ஆட்பதிவுத்திணைக்களத்திற்கு தகுந்த ஆதாரங்களுடன் வந்து அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். கடந்த ஏப்பரல் மாதத்துக்குப் பின்னர் கொழும்பிலிருந்து எதுவித அடையாள அட்டைகளும் யாழ்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 25

நல்லூர் கிளை நூலகம்
உடனுதவும்
-10-1991
பகுதி

பக்கங்கள் நான்கு -10-1991 விலை ரூபா:- 5 00

# முரசொலி

முரசு 05 ஒலி 282 பிரசோற்பத்தி ஐப்பசி 05 (22-10-1991) செவ்வாய்

# வலம்புரி நடவடிக்கை நிறுத்தம்?

# வடபகுதி ராணுவத் தளபதி காயம்

## கொழும்புப் பத்திரிகை தகவல் குழப்பமடையச் செய்யவே என பி.பி.ஸி.

குடாநாட்டில் கடந்த வியாழனன்று ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாம் கொழும்புப்பத்திரிகை ஒன்றை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி நேற்று இச் செய்தியை வெளியிட்டது.

ஒப்பரேஷன் வலம்புரி என ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை மூலம் தீவுப் பகுதிகளுக்குள் இராணுவம் சென்றதுடன் நிறுத்தப்பட்டுள்ளது எனக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதாம்

இதேவேளை தீவுப் பகுதி நடவடிக்கைகளின் போது காயமடைந்த படையினருள் வடபகுதிக்கான இராணுவத் தளபதி பிரிகேடியர் விஜய விமலரட்னவும் ஒருவர் என அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது மிதிவெடிகள் அகற்றும் பணியின்போதே படையினர் காயமடைந்தனராம்

—04ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் கடல் பகுதியில் கடற்படை மீது புலிகள் தாக்கு

நேற்று மாலை 4-30 மணியளவில் குருநகரில் உள்ள கல்முனை வரை பீரங்கிப்படகு நெருங்கி வந்து பலமுறை சுட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கல்முனையில் இருந்து விடுதலைப் புலிகள் படகைநோக்கி தாக்கவே அது விரைந்து விலகிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் மண்டைதீவு சந்திக்கு இராணுவம் வந்து

—04ஆம் பக்கம் பார்க்க

## திரும்பிச் சென்றோர்க்கும் இலவச உணவு நிவாரணம்

வடமராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு திரும்பிச் சென்றாலும் அந்தந்தப்பகுதி ப.நோ.கூ: சங்கங்கள் மூலம் ஒரு வார இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும் என செயலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது,

இடம்பெயராமல் வடமராட்சிப் பகுதியிலேயே தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி பின்னர் முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 04, 06

## தடுத்து வைக்கப்பட்ட 42பேர் நேற்று விடுதலை

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட 42 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மாறன், மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா, ஆஞ்சநேயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களை அழைத்துச்செல்ல அவர்களின் உறவினர்கள் அங்கு வந்திருந்தனர். (04)

## கருப்பசாமி வெளியேற்றம் காமினி கண்டனம்

அகில இந்திய வானொலி நிருபர் கருப்பசாமியை இலங்கையை விட்டு வெளியேற்றும் உத்தரவை காமினி திஸநாயக்க கண்டனம் தெரிவித்துள்ளாராம்.

இந்நடவடிக்கை ஒரு மட்டு

—04ஆம் பக்கம் பார்க்க

## வேலணையில் சிக்கியோரை மீட்டுத்தருமாறு கோரிக்கை

வேலணைப் பகுதியில் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ள நூற்றி ஐம்பது பேரை மீட்டுத் தருமாறு அவர்களின் உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

இவர்களின் பெயர் விவரங்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சுவிற்சலாந்து இளைஞருக்கு யாழ்ப்பாணத்தில் திருமணம்

சுவிற்சலாந்து இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணப் பெண்மணி ஒருவரை இந்து சமய முறைப்படி திருமணம் செய்த சம்பவம் நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் நேற்று நடைபெற்றது.

கிறிஸ்தவ மத போதனைக்காக வந்த இவர் இப் பெண்ணை விரும்பியதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மந்திகை ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகிறது

மந்திகை அரசினர் வைத்தியசாலை நேற்று முதல் மீண்டும் செயற்படத்தொடங்கியுள்ளது,

வடமராட்சி மக்கள் இடம்பெயர்ந்ததால் இது கடந்த சிலதினங்களாக மூடப்பட்டது நேற்றைய தினம் நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டனர். சிகிச்சைகளும் நடைபெற்றன. 07

## சுதந்திரக்கட்சி எம். பியின் பெயரில் தபால் மோசடி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொழும்பு மாவட்ட எம். பி. யான சி. வீ. குணரட்ணவின் பெயர் உள்ள தபால் சிலைப் பயன்படுத்தி மோசடியாக 25000 தபால்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தபால் மா அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

இந்தக் கடிதங்களை லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் உபயோகித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (08)

## வவுனியா ஊரடங்கு

வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப்படைகளின் கட்

—04ஆம் பக்கம் பார்க்க

## தரிப்பு- தறிப்பு, வீதி- விதி
## கொழும்பில் தமிழ் படும்பாடு

தென்பகுதியில் அதுவும் கொழும்பு மாநகரப் பகுதியில் அறிவித்தல் பலகைகளில் தொடர்ந்தும் தமிழ்க் கொலைகள் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன

பம்பலப்பிட்டி காலி வீதிச் சந்தியில் உள்ள தரிப்பிடமொன்றில் 'பஸ்கள் தறிப்பிடம்' எனவும், பஞ்சிகாவத்தையில் 'பஞ்சிகாவத்தை விதி' எனவும், கிருலப்பனையில் 'ஸ்ரீ சித்தார்த்த தேரு' எனவும், கோட்டைக்குச் செல்லும்சிலபஸ்களில் 'கொட்டை' எனவும் எழுத்துப்பிழைகளுடன் தமிழில எழுதடபட்டதைக் காணமுடிகின்றது

இதைவிட வேறுபல அறிவித்தல் பலகைகளில் பண்பற்ற முறையில் தமிழில் எழுதப்பட்டுள்ளன. கொழும்புத் துறைமுகப் பகுதியிலுள்ள சுவரொன்றில் 'மூத்திரம் விட வேண்டாம்' என அசிங்கமாக எழுதப்பட்டுள்ளது

## வெளிவாரிப்பட்ட கற்கை நெறி
## இன்று வைபவரீதியாக ஆரம்பம்

யாழ் பல்கலைக் கழகத்தில் கலை வர்த்தகத் துறைகளுக்கான வெளிவாரிப் பட்ட கற்கை நெறி இன்று கைலாசபதி கலையரங்கில் வைபவரீதியாகத்துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜாவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் பேராதனை, ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகங்கள் மட்டுமே வெளிவாரிக்கற்கைநெறிகளை நடாத்திவந்தன.

இக்கற்கை நெறிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் வித்தியாசமான அணுகு முறையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளமை உள்வாரி மாணவர்கள் அனுபவிக்கும் பல்கலைக்கழக வாழ்வின் சில அம்சங்களை வெளிவாரி மாணவர்களும் பெறவாய்ப்பளிக்கு மெனபல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் இக்கற்கை நெறியில் 30க்கும் மேற்பட்ட பரீட்சைகள் தகுதித் தேர்வுகளாகக் கொள்ளப்படுகின்றன.

இக்கற்கை நெறியில் காலத்தின் தேவைக்கேற்ப யாழ் பல்கலைக்கழகத்தினால் புதிய அணுகுமுறைகள் புகுத்தப்பட்டுள்ளன பிரதான பாடங்கள் துணைப் பாடங்கள், துணை ஆங்கிலம் எனப்பாடநெறிகள் அமைந்துள்ளன.

கடந்த 10 வருடங்களாக யாழ் பல்கலைக்கழகத்தினர் இடைவிடாது செய்த முயற்சியின் பயனாகவே வெளிவாரிப் பட்டக் கற்கை நெறி இங்கு ஆரம்பிக்க அனுமதி கிடைத்துள்ளதென்றும், இதனால் தமிழ் மாணவர்கள் குறைந்த செலவில், சிரமங்கள் இன்றி. தமது சொந்த மண்ணிலேயே உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு கிட்டியுள்ளதென்றும் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தனர்.

□ □ □

## மனைப் பொருளியல் கருத்தரங்கு

சாவகச்சேரி கோட்டத்திற்குள் அடங்கும் சகல பாடசாலைகளிலும் மனைப் பொருளியல் கற்பிக்கின்ற பயிலுநர், பயிற்றப்படாத ஆசிரியர்கட்கு சேவைக்காலப் பயிற்சிகள் நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன.

மேற்படி கருத்தரங்கு நாளை 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (42)

Sri Lanka Red Cross Society
Mullaitivu Branch

**Dental Surgeon & Dental Therapist**

Wanted Dental Surgeon and Dental Therapist for Mullaitivu District. Please apply before 25 10. 91 and appear for interview on 26 10 91 at 1 p .m in our branch office

Hony. Secretary,
Sri Lanka Red Cross Society,
Jaffna Branch.

73, Kandy Road,
Jaffna.

10028

வாகன வாடகைக்கான
**கூறுவிலை கோரல்**

கொழும்பு, அனுராதபுரம், வவுனியா களஞ்சியங்களிலிருந்து பசளை. விவசாய இரசாயனப் பொருட்கள், மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை முல்லைத்தீவு மாவட்டத்தில் என்னால் குறிப்பிடப்படும் இடங்களுக்கு ஏற்றிவருதற்கான லொறிக் கூலிக்கான கூறுவிலை லொறி உரிமையாளர்களிடமிருந்து 1991 நவெம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு கோரப்படுகின்றது,

**விண்ணப்பங்கள் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.**

1) விண்ணப்பதாரியின் பெயரும், விலாசமும்.
2) ஒரே முறையில் வாடகைக்கு விடக்கூடிய லொறிகளின் எண்ணிக்கை.
3) கோரப்படும் லொறிக்கூலி.
   3. 1 தொன் ஒன்றுக்கு ஒரு மைலுக்கான கூலி,
   3. 2 முழுத்தூரத்துக்குமான கூலி.
   கொழும்பு — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
   அனுராதபுரம் — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
   வவுனியா — புதுக்குடியிருப்பு/துணுக்காய்
4) தாமதக் கட்டணம் - நாளொன்றுக்கு

இ. தர்மகுலசிங்கம்
அரசாங்க அதிபர்.
முல்லைத்தீவு மாவட்டம்,
10025

## ஈழ அகதிகளைத்திருப்பி அனுப்புவதில் தீவிரம்
## 2000பேர் கொண்ட முதல் அணி திருமலை வருகிறது

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத்தமிழ் அகதிகளை விரைவில் இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான உடன்பாடொன்றை இருநாடுகளும் எட்டியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பொன்றில் இது பற்றிய மேலும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி முதற் கட்டமாக தமிழக அகதி முகாம்களில் உள்ள 2000பேர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவர். இவர்கள் 500 பேர் கொண்ட நான்குகுழுக்களாகதிருமலைத் துறை முகத்துக்கு இன்னும் சில தினங்களில் அனுப்படுவர். இந்த 2000பேரினதும்பெயர்ப் பட்டியல் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள ஏனைய ஈழ அகதிகளும் இவ்வாறு குழுக் குழுவாக இங்கு அனுப்பிவைக்கப்படுவர்.

## வட இந்தியப் பூமியதிர்ச்சி;
## இறந்தோர் தொகை500 ஆக அதிகரிப்பு

வட இந்தியாவில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் இறந்தோரின் தொகை 500 ஆக உயர்ந்துள்ளதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பூமியதிர்ச்சியினால் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர், பலர் காணாமற் போய்விட்டனர், ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்துவிட்டனர்.

வட இந்தியாவில் இமாலயப் பகுதியும் மற்றும் பஞ்சாப், காஷ்மீர், ஹரியானாப் பகுதிகளும் இந்தப் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் 45 நிமிடங்கள்வரை பூமியதிர்ச்சி நீடித்தது.

## மீண்டும் சொந்தக் கட்டிடத்தில்

இரத்மலான இந்துக்கல்லூரியை மீண்டும் ஜனவரி முதல் முன்னைய இடத்தில் இயங்கச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# செய்தி உலகம்

## பனிமலை வேகமாக நகர்கிறது

தென் அத்திலாந்திச் சமுத்திரத்தில் 3000 சதுரமைல்களைக் கொண்ட இராட்சதப் பனிமலை ஒன்று நகர்ந்து வருவதாகவும் விரைவில் இது கப்பல் போக்குவரத்துக்கு ஆபத்தை உண்டுபண்ணக் கூடும் என்றும் நிபுணர்கள் தெரிவித்தனர்.

அண்டாட்டிக் ஆய்வு நிலையத் தளத்தின் எஞ்சிய பகுதியையும் அது சுமந்து வருவதினைச் செய்மதிப் படங்கள் மூலம் தெளிவாகத் தெரிவதாகவும் அறிய முடிகிறது.

நாள் ஒன்றுக்கு 15 மைல் தூரம் நகர்ந்து வரும் இப் பனிமலை தற்போது பேர்க்லாந்து தீவிலிருந்து 450 மைல் தூரத்தில் உள்ளது. உஷ்ணமான கடற்பகுதிக்கு வரும்போது அது ஆயிரக்கணக்கான துண்டுகளாக உடைந்து விடும் எனவும் நிபுணர்கள் தெரிவித்தனர். (21)

## மலிவு விலை சோதனைக்குழாய் சிசு

தற்போது சோதனைக்குழாய்க்குழந்தையை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள முடிகிறது. முன்பு இதற்கு 25000 ரூபாவரை செலவானது ஆனால் தற்போது 3500 இந்திய ரூபாய்களுடன் பெற்றுக் கொள்வதற்கு சென்னை சீபா மருத்துவமனை வசதி செய்துள்ளது. (22)

## கடலுக்கு அடியில் காட்சிக் கூடம்

ஜப்பானில் ஜசாகா என்ற இடத்தில் கடலுக்கு அடியில் கண்ணாடிக் கூண்டினால் அமைக்கப்பட்ட அரும் பொருள் காட்சியகம் உள்ளது இதற்குள் இருந்தவாறே கடல்வாழ் உயிரினங்களையும் மற்றும் கடலின் அடிப்பாகத்தையும் கண்டுகளிக்க முடியும். (22)

## ஆலயத்திற்குக் காப்புறுதி

கேரளாவிலுள்ள குருவாயூரப்பன் கோவில் 12 கோடி ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள யானைகள் மட்டும் 42 லட்சம் ரூபாவுக்கு காப்புறுதி செய்யப்பட்டுள்ளன ஆலயப்பொருள்கள் திருட்டுப் போகாமல் இருக்கவே இந்த ஏற்பாடு. (22)

# இந்து ஆலயத்தைக் தாக்க முயற்சி

## கனடாவில் எழுவர் கைது; ஆயுதங்களும் மீட்பு

கனடா - டொராண்ரோவில் உள்ள இந்துக் கோவில் ஒன்றைத்தாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று கனடியப் பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இக் கோவிலைத் தாக்குவதற்கென காரொன்றில் ஆயுதங்களுடன் வந்துகொண்டிருந்த அறுவர் நயாகரா நீர் வீழ்ச்சிப் பகுதியில் அமெரிக்காவைக் கடக்கும் பகுதியில் கைது செய்யப்பட்டதையடுத்தே இச்சதி அம்பலத்திற்கு வந்தது.

இக் குழுவில் சம்பந்தப்பட்ட ஏழாவது நபர் நியூயோர்க்கில் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இரு வாகனங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் தற்பொழுது கனடாவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளனர்.

டொராண்ரோவிலுள்ள விஷ்ணு ஆலயத்தைத் தாக்கவே இவர்கள் முயற்சியெடுத்ததாகவும், இதற்கான காரணம் உடனடியாக அறியப்படவில்லையெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ‘சார்க்’ மாணவர்களுக்கிடையே கடிதம் எழுதும் போட்டி

சார்க் நாடுகளைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையே கடிதப் போட்டியொன்றை நடாத்த சார்க் தபால் தொழில்நுட்ப பிரிவு தீர்மானித்துள்ளது.

‘நீடித்து நிலைக்கக் கூடிய நட்புறவு” (The source of lasting friendship) எனும் பொருள் பற்றி 800 சொற்களுக்கு மேற்படாமல் ஆங்கிலத்தில் இக்கடிதம் எழுதப்பட வேண்டுமெனவும் அது தெரிவித்துள்ளது.

போட்டியில் வெற்றியீட்டி முதலாம், இரண்டாம் இடத்தை பெறுபவர்களுக்கு ரூபா 1635, ரூபா 817 பெறுமதியான புத்தகங்களும் இலங்கை தேசிய பரிசும் வழங்கப்படும் என இலங்கை பிரதம தபால் அதிபர் திரு டி. எச். பாலச்சந்திரா சகல பாடசாலை அதிபர்களுக்கும் தெரியப்படுத்தி உள்ளார்.

இப்போட்டிக்கான ஆக்கங்களை 31.01 91-க்கு முன்பாக கட்டுப்பாட்டாளர், தலைமை தபாற்கந்தோர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். (15)

## 6 பொலிஸார் வேலை நீக்கம்

மாடுகளை ஏற்றிச்சென்ற ஒருவரிடமிருந்து 4500 ரூபாவை இலஞ்சமாகப்பெற்றதாக ஐந்து பொலிஸ் கான்ஸ்டபிள்களும் நிசர்வ் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவரும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தென் பகுதியிலுள்ள தெதனடொவ பொலிஸ் நிலையத்தை இவர்கள் சேர்ந்தவர்கள். (25)

## இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு இவர்களுக்கு

1991ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசினைப்பெறும் 7 பேர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந் நோபல் பரிசினைப் பெற்றவர்களின் விவரம்; சமாதானம்-ஆங்ஸான்சூகி (பர்மா) இலக்கியம்-நடைன கோர்டிமர் (தென்னாபிரிக்கா) மருத்துவம்-எர்வின் நெஹெர் (ஜேர்மனி) பேர்ட் சாகமன் (ஜேர்மனி) பொருளாதாரம்-ரொனால்ட் கோஸ் (அமெரிக்கா) பௌதிகம்-பயரிகிஸ் லெஸ்டி ஜெனிஸ் (பிரான்ஸ்) இரசாயனம்-ரிச்சார்ட் ஏர்னஸ்ட் (சுவிற்சர்லாந்து).

## நொச்சிமோட்டை பாதையை பயன் படுத்த அனுமதி

வவுனியாப்பகுதியில் பெய்து வரும் கடும் மழையினால் தாண்டிக்குளம்-சாந்த சோலை சுற்றுப்பாதை வழியான பயணம் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி வயல்களில் நீர் தேங்கி பாதை சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் நொச்சிமோட்டை பாதையை பிரயாணத்திற்கு திறந்துவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பாடசாலை வளவில் தேயிலைக் கன்றுகள் தமிழ்ப் பெற்றோர் அதிருப்தி!

மலையகம்-டிபிரிங்வெலி தமிழ் வித்தியாலயத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள காணியில் அப்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையினரால் தேயிலைக் கன்றுகள் நாட்டப்பட்டுள்ளதாம்.

இதனால் இப் பாடசாலை தமிழ்ப் பெற்றோரும், ஆசிரியர்களும் பெரும் அதிருப்தி கொண்டுள்ளனர். (25)

## போலிஸ்கார் - பௌஸர் மோதல்

## இன்ஸ்பெக்டர் உட்பட ஐவர் பலி

கல்கிசை காலிவீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் தெகிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கே. கருணாதாஸ, அவரது இரண்டுபிள்ளைகள், பொலிஸ் சாரதி உட்பட ஐவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

கல்கிசையிலிருந்து வெள்ளவத்தை நோக்கி வந்துகொண்டிருந்த பௌஸர் வண்டி பொலிஸ்காருடன் மோதிய போதே இச்சம்பவம் நிகழ்ந்தது. (25)

## புத்தரும் தமிழ் கற்றாராம் ‘லலிதவிஸ்தாரம்’ கூறுகிறது

புத்தர் தமிழ் படித்ததாக வரலாறு கூறுகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ‘லலிதவிஸ்தாரம்’ என்ற நூலில் அவர் அரச குமாரனாக இருந்த போது என்னென்ன படித்தார் எனக் கூறப்பட்டுள்ளது ‘அதில் சித்தார்த்தன் தமிழும் படித்ததாக கூறப்பட்டுள்ளது (22)

## போஷாக்குக் குறைந்த தாய்மாரும் தாய்ப்பால் ஊட்டலாம்

புஷ்டிவிருத்தியற்ற தாய்மார்கள் கூட குழந்தைகளுக்கு தாய்ப்பாலை ஊட்டலாம் என பிரபல குழந்தை வைத்திய நிபுணர் கலாநிதி பிரியாணி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

புஷ்டிவிருத்தியற்ற போஷாக்குகுறைந்ததாய்மார்கள் கூட நாளொன்றுக்கு 500 மி லீற்றர் தாய்ப்பாலை சுரக்க வல்லமையுடையவர்கள். இந்த 500 மி லீற்றர் பாலும் நான்கு மாதக் குழந்தைக்கு ஒரு நாளைக்குப் போதுமானதாகும். நான்கு மாதத்திற்கு மேற்பட்ட குழந்தைக்குத் தாய்ப்பாலோடு வேறு உணவு வகைகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

புட்டிப்பாலை பருகும் குழந்தை தாய்ப்பாலைப் பருக மறுப்பதற்கு இரண்டு விதமான உறிஞ்சல்களும் வேறுபட்டவை என்பதே காரணம்.

தாய்ப்பால் சத்தினையும் நோய்த்தடுப்புச் சக்தியையும் கொடுப்பதோடு தாய் - சேய்க்கிடையே ஓர் உறவுமுறையை ஏற்படுத்தி உடல், உளவளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் அவ் வைத்திய நிபுணர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மணலாறில் சிப்பாய் பலி; மனைவி தெற்கில் தற்கொலை

இரு வாரங்களுக்கு முன்னர் இராணுவ வீரரொருவரை திருமணம் செய்து கொண்ட புதுமணப் பெண்ணொருவர் தனது கணவர் மணலாறில் நடந்த யுத்தத்தில் பலியானதையடுத்து தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் வரக்காபொலையில் இடம் பெற்றுள்ளது. இவ்விடத்தைச் சேர்ந்த திக்வெல தேவகே சுமணாவதி என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவர்.

இறந்த சிப்பாயின் ஞாபகார்த்தமாக இடம் பெற்ற தானம் கொடுக்கும் வைபவத்தின் பின்னர் சுமணாவதி தற்கொலை செய்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (25)

## தீவக அலுவலகம் இடமாற்றம்

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திற்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டு நேற்றுமுதல் இயங்கி வருகின்றது

இம் மாதத்திற்கான தீவக ஆசிரியர் சம்பளம் கொடுப்பனவுகளும் இவ் அலுவலகத்திலேயே வழங்கப்பட உள்ளன. (15)

## விரும்பிய சேவையில் இணைய அரச ஊழியர்களுக்கு வாய்ப்பு

அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தாம் விரும்பிய சேவை நிலையமொன்றில் கடமையாற்றவும், தாம்விரும்பிய மாகாண அரச சேவையில் கடமையாற்றவும் வேண்டிய ஒழுங்கு முறை செய்து கொடுக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை மூலம் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு பணித்துள்ளார்.

அரசாங்க சேவையும் மாகாண அரசாங்க சேவையும் வெவ்வேறான சேவைகள் என்றும் இச்சேவையில் உள்ளவர்களை ஒரு சேவையிலிருந்து இன்னொரு சேவைக்கு விடுவிப்பதன் மூலமும் அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களை மற்றைய சேவையில் நியமிப்பதன் மூலமுமே உத்தியோகத்தர்களை பரிமாற்றிக்கொள்ள முடியும் எனவும் இச்சுற்றறிக்கை கூறுகிறது. (15)

## ஸ்ரான்லி திலகரட்ன விரைவில் பதவி துறப்பார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரும், தற்பொழுது அக்கட்சியினரின் பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியிருப்பவருமானஸ்ரான்லி திலகரட்ன விரைவில் பதவி விலகவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

முன்னாள் சபாநாயகரான இவர் ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணையில் ஒப்பமிட மறுத்ததன் மூலம் கட்சிக்குள் சர்ச்சைக்குரியவராக திகழ்ந்து வருகிறார்.

இவருக்கு விரைவில் வெளிநாடொன்றில் உயர்பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்திய நிருபர் கருப்பசாமி நேற்று சென்னை திரும்பினார்

அகில இந்திய வானொலியின் கொழும்பு நிருபர் ஆ. கருப்பசாமி நேற்று இரவு கொழும்பை விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

சபாநாயகர் எம். எச் மொகமட் பதவிதுறந்துள்ளதாக கடந்த வியாழக்கிழமை செய்தி அனுப்பியமைக்காக இவரை நாட்டை விட்டுவெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது.

# பெற்றோல் கடத்தியவர்கள் வவுனியாவில் கைது

சுடுதண்ணீர் போத்தலுக்குள் பெற்றோல் கொண்டுவந்த பெண்மணி ஒருவரும் ரோனிக் மருந்துப் போத்தலுக்குள் மூடியை உடையாது பெற்றோலை விட்டுக்கொண்டுவந்த பெண்மணி ஒருவரும் வவுனியாவில் படையினரிடம் அகப்பட்டனர். இதேபோல மரக்கறிச் சாக்குக்குள் கற்பூரம் மறைத்து வைத்து கொண்டுவந்தவரும், பாணுக்குள் கற்பூரம் மறைத்து வைத்துக் கொண்டுவந்தவரும் படையினரிடம் சிக்கியுள்ளனர்.

இவர்கள் விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். 06

# இடம்பெயர்ந்தோருக்கு இலவச உலர் உணவு நிவாரணம்

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த 1963 குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமைக்கப்பட்ட 19 முகாம்களில் தங்கியுள்ளனர்.

இம்முகாம்களில் உள்ளவர்களுக்கு அந்தந்தப் பகுதி ப. நோ. கூ. சங்கங்களின் மூலம் இலவச உலர் உணவு வழங்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல கொட்டடி, நவாந்துறைப் பகுதிகளில் இருந்து முற்றாக இடம்பெயர்ந்து வேறு பிரிவுகளுக்குள் இருப்பவர்களுக்கும் இடம்பெயர்ந்தோர் பட்டியலுக்கு அமைய ஒரு வார இலவச உலர் உணவு வழங்கப்படவுள்ளதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (04,06)

# வன்னிப் பகுதி ஆசிரியர்களுக்கு உயிராபத்துக் கொடுப்பனவு

ஆசிரியர்களின் உயிராபத்துக் கொடுப்பனவு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வித்திணைக்களங்களின் கணக்காளரான கே. ஆர். துரைசிங்கம் எடுத்த முயற்சியால் வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சில் இருந்து இதற்கு வேண்டிய கட்டு நிதி கிடைத்துள்ளது.

1988 ஜனவரி தொடக்கம் 1989 ஜூலை வரையான காலப்பகுதி உயிராபத்துக் கொடுப்பனவு இவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 17

சுவிற்சலாந்து ..

விரைவில் இப்பெண் சுவிற்சலாந்து செல்லவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

வேலணை...

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதும் இது குறித்த நடவடிக்கை எடுப்பதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவித்தனர் (15)

வலம்புரி

இதேவேளை இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டமை குறித்தோ, இராணுவத் தளபதி காயமடைந்தமை குறித்தோ வேறு எந்த செய்திகள் மூலமாகவும் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை

குடாநாட்டில் எப்பகுதியில் தாம் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கப்போகிறோம் என்பது குறித்து குழப்பமடையச் செய்யவே படையினர் குடாநாட்டின் பல முனைகளில் தாக்குதல் நடாத்துவதாகப் பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தீவுப்பகுதி தபாலகங்கள்

தீவுப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தீவுப்பகுதியில் உள்ள சில தபாலகங்கள் யாழ் பிரதம தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கிவருவதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

வவுனியா...

டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்று மாலை 6 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

குருநகர்...

வந்து போவதாகவும் அங்கிருந்து கரையோரங்களை நோக்கி சினைப்பர் தாக்குதலை நடாத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இருவர் நேற்றைய தினம் காயத்துக்குள்ளாகியதாகவும் சொல்லப்படுகிறது. 15, 06, 22

கருப்பசாமி...

மீறிய செயல் என காமினி திஸநாயக்க கூறியதாக தெரிவிக்கப்பட்டது.

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு கிருமிநாசினி தருவிக்க ஏற்பாடு

கிளிநொச்சிப்பகுதி விவசாயிகளின் நன்மை கருதி நெற்பயிர்களுக்கான கிருமி நாசினி மருந்துகளை கொழும்பிலிருந்து தருவிக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் க. பொன்னம்பலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இம்மாதம் வடக்கே வரும் கப்பலில் கொண்டுவரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பெரும்போக பயிர்ச்செய்கை வேலைகள் ஆரம்பமாகியிருப்பதால் இவற்றைக் கொண்டுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சிறுபோகத்தில் இம் மருந்துகள் இன்மையால் நெல் விளைச்சல் நோயினால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 17

## அனுமதி பெறவேண்டும்

எதிர்வரும் நவம்பர் மாதம் 21ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை தமிழீழத் தேசிய நாளையொட்டிய மாவீரர் வாரம் பெரிய அளவில் கொண்டாடப்படவிருக்கும் வேளையில், மாவீரர் நாளையொட்டி யாழ்மாவட்டத்தில் அரங்கேற்றவுள்ள கலைநிகழ்வுகள் யாவும் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் அங்கீகாரம் பெறுவது கட்டாயம் என கலை பண்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது.

எனவே மாவீரர் நாளையொட்டி மேடையேற்றும் கலை நிகழ்ச்சியின் எழுத்துப் பிரதிகள் யாவும் இம்மாதம் 30ம் திகதிக்கு முன்பாக கோண்டாவிலில் உள்ள யாழ் மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகச்செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் எனவும் முதலில் நிகழ்ச்சிப் பிரதிகள் கழகத்தால் பார்வையிட்டு அனுமதி பெற்று இறுதி ஒத்திகை மூலம் ஒப்புதல் வழங்கப்படும் எனவும் கலை நிகழ்ச்சிகள் மட்டுமே மாவீரர் வாரத்தில் அரங்கேற அனுமதி உண்டென்றபடியால் உடன் கலைஞர்கள் தொடர்புகொள்ளுமாறும் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம் தெரிவித்துள்ளது

## மட்டக்களப்பில் தாக்குதல்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு ரயில் நிலையம் முன்பாக அமைந்திருந்த படையினரின் காவலரண் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். புலிகள் துப்பாக்கிச் சூட்டையும், கிரனேட் வீச்சையும் நடத்தியதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## கோழித்திருடர்

குருநகர் பகுதி மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளபோதிலும் இரவில் அகதி முகாம்களிலும், பாடசாலைகள் கோயில்களில் தஞ்சமடைகின்றனர்.

இதேநேரம் இரவில் இவர்களின் வீடுகளில் உள்ள பொருள்கள், கோழிகள் என்பன திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 15

# யாழ் நகரம் நேற்று வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாண நகரம் வழமைக்குத் திரும்பியதைத் தொடர்ந்து செயலகம் உட்பட அனைத்து அரச, தனியார் நிறுவனங்களும் செயற்பட்டன.

மக்கள் அன்றாடக் கருமங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியிலும் ஆயிரத்திற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்திருந்தனர். வழமைபோல் சகல கிளினிக்குகளும் செயற்பட்டன. 07

# இறந்த ஊழியர் நினைவுதினம் யாழ் ஆஸ்பத்திரியில் அனுஷ்டிப்பு

யாழ் போதனா வைத்தியசாலையில் 1987ஆம் ஆண்டு அக்டோபர் 24 திகதி இந்திய இராணுவத்தினர் உட்புகுந்து 21 ஊழியர்களைச் சுட்டுக் கொன்ற நான்காவது ஆண்டு நினைவு தினம் ஊழியர்களாலும், பொதுமக்களாலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மலர்மாலை அணிவித்து 21 தீபங்களும் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அனைத்து ஊழியர்கள் சார்பில் ஊழியர் மு. ஈழத்தமிழ்மணி இரங்கலுரை நிகழ்த்தினார்.

அதன்பின்னர் மில்க்வைற் ஸ்தாபனத்தினரால் வழங்கப்பட்ட 21 மகிழம் மரக்கன்றுகள் வைரவ ஆலயப்பகுதியில் இறந்தவர்களின் பெற்றோர்களாலும் உறவினர்களாலும் இறந்தவர்கள் நினைவாக நாட்டப்பட்டன. 07

# ஜே. வி. பியைச் சாட்டி

## கார்களை அபகரித்தாராம் காமினி

ஜே. வி. பியினரால் அழித்தொழிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்ட வாகனங்கள் மீண்டும் நல்ல நிலையில் வெளிவந்துள்ளனவாம்.

கண்டியில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி பிரேமதாஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்களில் சில முன்னாள் மகாவலி அமைச்சரும், அதிருப்தியாளர் குழு முக்கிய பிரமுகருமான காமினி திஸநாயக்க கலந்துகொண்ட காலி கூட்டத்திற்கு ஆட்களை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப் பட்டதாகவும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

# கல்வி நிர்வாக அதிகாரிகள் பதவிக்கு கொழும்பில் போட்டிப் பரீட்சை

பாடசாலை அதிபர் சேவையில் 27.9.91 க்கு முன்னர் 5 வருடகாலம் கடமையாற்றிய அதிபர்கள் திறமை, சேவை மூப்பு அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாகச் சேவை III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை 28.12.91 ல் கொழும்பில் நடைபெற உள்ளதாக கல்விச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது

இதற்கான விண்ணப்பங்களை அதிபர்கள் தாமே தயாரித்து இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். (15)

## கிளிநொச்சிக்கு உணவுலொறிகள்

கிளிநொச்சியில் போதியளவு உணவுப் பொருள்கள் களஞ்சியத்தில் இருப்பதாக கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இருபத்திரண்டு லொறிகளில் உணவுப் பொருள்கள் வந்துள்ளதாகவும் அவை அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒய்வூதியம்

புலோலி பருத்தித்துறை கிராமிய வங்கிகளில் நேற்று ஓய்வூதியர்களது செப்டம்பர் மாத கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. 08

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 22.10.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.